# “வரையறுக்கப்பட்ட தேசிய ரீதியிலான கலைத்திட்டமின்மையால் முன்பள்ளிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும் ” மட்டக்களப்பு மண்முனை வடக்கு கல்விக்கோட்டத்திலுள்ள முன்பள்ளிகளை அடிப்படையாக கொண்ட ஆய்வு

Dilani Jesuiya

Temporary Assistant Lecturer, Department of Education and Child Care,
Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு குழந்தையின் அரம்பக்கற்றலிற்கு ஆயத்தம் செய்யும் இடமாக முன்பள்ளிகள் விளங்குகின்றன. இன்றைய நிலையில் ஆரம்பக்கற்றலிற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதில் ஓர் சமநிலையற்ற தன்மையை அவதானிக்க முடிகிறது. முன்பள்ளிகளிகளிற்கென பொதுவாக கலைத்திட்டமின்மையால் வெவ்வேறு நோக்கங்களை அப்படையாக கொண்டு கற்பித்தலை முன்னெடுப்பதே இதற்கு காரணமாகும். அதாவது பாடசாலைக் கற்பித்தலிற்கென்று வரையறுக்கப்பட்ட கலைத்திட்டம் உருவாக்கப்படாமை இலவச கல்வித்திட்டத்திற்கமைய உள்ளீர்க்கப்படாமைக்கான காரணமாக கொள்ளலாம். இந்நிலையில் “ முன்பள்ளிகளில் வரையறுக்கப்பட்ட கலைத்திட்டமின்மையால் எதிர் நோக்கும் பிரச்சினைகள் ” தொடர்பாக இவ்வாய்வு விளங்குகின்றது. இதன்படி மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட 59 முன்பள்ளிகள் நோக்க மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டதுடன் ஆய்விற்கான தரவுகளை சேகரிப்பதற்கு இலகு எழுமாற்று மாதிரி மூலம் 118 முன்பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் , வசதி மாதிரிக்கேற்ப 295 பெற்றோர்களிடமிருந்தும் வினாக்கொத்து மூலம் தரவுகள் பெறப்பட்டன. அத்துடன் பாலர்பணியக பணிப்பாளரிடமிருந்து நேர்காணல் அடிப்படையில் தரவுகள் ஆய்விற்காக பெறப்பட்டதுடன், ஆய்வாளனின் நேரடி அவதானத்தின் மூலமும் ஆய்விற்கான தரவுகள் பெறப்பட்டது. இத்தரவுகள் நுஓஊநுடு மூலம் பகுப்பாய்விற்குட்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. இதனடிப்படையில் முன்பள்ளிகளில் ஒரே மாதிரியான கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறாமை, நடைமுறையில் வெவ்வேறுபட்ட நோக்கங்களை அடிப்படையாக கொண்டு கற்பித்தல் இடம்பெறுதல், மாணவரது விருப்புக்கு முக்கியத்துவமளிக்காமை, திருப்திகரமான கற்பித்தல் இடம்பெறாமை, பெற்றோரது தலையீடுகள் ஏற்படுத்தும் தாக்கங்கள் உட்பட முன்பள்ளிச்சமூகம் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளிற்கு அடிப்படையாக அமையும் காரணியாக பொதுவானதொரு கலைத்திட்டமொன்று உருவாக்கப்படாமையே என்பதை ஆய்வாளன் கண்டறிந்து கண்டறியப்பட்ட உண்மைகளை முன்வைப்பதுடன், இதற்கான விதந்துரைப்புகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**அருஞ்சொற்பதங்கள்** : வரையறுக்கப்பட்ட கலைத்திட்டம், முன்பள்ளிகள்